
Australian Government
Department of Health and Aged Care

BE COVIDSAFE



# துரித நோயறிவுச் சோதனிகள் (RATகள்)

## ‘துரித நோயறிவுச் சோதனி’ என்பது என்ன?

பொதுவாக RAT என்று அழைக்கப்படும் ‘துரித நோயறிவுச் சோதனி’ என்பது உங்களுக்கு COVID-19 இருக்கிறதா என்பதை நீங்களாகவே சோதித்துப் பார்த்துத் தெரிந்துகொள்வதற்கான ஒரு சோதனியாகும். மருத்துவர் அல்லது மற்ற சுகாதாரத் தொழிலர் ஒருவருடைய உதவியில்லாமல் நீங்களாகவே வீட்டில் இந்த சோதனையைச் செய்துகொள்ளலாம்.

## ‘துரித நோயறிவுச் சோதனி’ ஒன்றை நான் எங்கிருந்து பெறலாம்?

இணையம் மூலமாகவும், மருந்துக்கடைகளிலிருந்தும், அல்லது பெரிய சூப்பர்-மார்க்கெட்டுகள் மற்றும் சில பெட்ரோல் நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சில்லறை வியாபாரிகளிடமிருந்து ‘துரித நோயறிவுச் சோதனி’ ஒன்றை நீங்கள் வாங்கலாம்.

## ‘துரித நோயறிவுச் சோதனை’ ஒன்றை நான் எப்போது மேற்கொள்ளவேண்டும்?

‘துரித நோயறிவுச் சோதனை’ ஒன்றை நீங்கள் பின் வரும் தருணங்களில் மேற்கொள்ளவேண்டும்:

- COVID-19 நோயறிகுறிகளாக இருக்கக்கூடிய அறிகுறிகள் உங்களுக்கு இருந்தால்
- உங்களுக்கு COVID-19 இருக்கிறதா என்று நீங்கள் விரைவாகச் சோதித்துத் தெரிந்துகொள்ள விரும்பினால் - உதாரணத்திற்கு, ஒரு முதியோர் பராமரிப்பு இல்லத்திற்கு நீங்கள் செல்ல விரும்பும் பொழுது
- உங்களுடைய பாடசாலையில், அல்லது உங்களது வேலைத்தலத்தில் COVID-19 கண்காணிப்புத் திட்டம் ஒன்று நடைமுறையில் இருந்தால். மேலதிகத் தகவல்களுக்கு உங்களுடைய பாடசாலை அல்லது உங்களுக்கு வேலை தரும் முதலாளியைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்
- உங்களுடைய மாநில அல்லது எல்லைப்-பிரதேச சுகாதாரத் திணைக்களம் சோதனையை மேற்கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக்கொண்டிருக்கும் பொழுது.

## என்னுடைய சோதனை முடிவுகளைப் பெற்றதும் நான் என்ன செய்யவேண்டும்?

நீங்கள் நேர்மறையான முடிவைப் பெற்றால், நீங்கள் வீட்டில் தனிமைப்படுத்த தேவையில்லை.

உங்களைச் சுற்றியுள்ளவர்களைக் காக்க:

- கடுமையான நோய் அபாயம் உள்ளவர்களுடன் தொடர்பைத் தவிர்க்கவும்
- நீங்கள் வீட்டில் இல்லாத போது வீட்டிற்குள் முகமூடியை அணியுங்கள்
- உங்கள் கைகளை தவறாமல் கழுவவும்
- வயதான மற்றும் ஊனமுற்றோர் பராமரிப்பு வசதிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்ற அதிக ஆபத்துள்ள அமைப்புகளைப் பார்வையிட வேண்டாம்

நோய்த்தொற்று உங்களுக்கு இல்லை என்ற முடிவை நீங்கள் பெற்றால், இந்த வைரஸ்-இன் பரவலைக் குறைப்பதற்காக அனைத்து பொது சுகாதார அறிவுரைகளையும் நீங்கள் பின்பற்றவேண்டும்.

‘செல்லுபடியாகா’ (‘invalid’) முடிவு ஒன்றை நீங்கள் பெற்றால், சோதனி சரியாக வேலை செய்யவில்லை என்ற அர்த்தமாகும். அதை வீசிவிட்டு நீங்கள் வேறொரு சோதனையை மேற்கொள்ளவேண்டும்.

## துரித நோயறிவுச் சோதனிகளைக் குழந்தைகளில் பயன்படுத்தலாமா?

ஆம். குழந்தைகளுக்கு செய்யப்படும் சோதனைகள் வயதுவந்த ஒருவரால் மேற்பார்வை செய்யப்படவேண்டும். குழந்தை ஒன்றை சோதிப்பதற்காக சோதனி ஒன்றைப் பயன்படுத்தும் பொழுது பாதுகாப்பு குறித்த அறிவுறுத்தல்கள் எதுவும் அத்துடன் கொடுக்கப்பட்டுள்ளனவா என்று பாருங்கள்.



### மேலதிகத் தகவல்கள்

மேலதிகத் தகவல்களுக்கு, 1800 020 080 எனும் இலக்கத்தில் தேசிய கொரோனா வைரஸ் ஹெல்ப்லைனை அழைக்கவும். இலவச மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்குத் ‘தெரிவு 8’-ஐ மேற்கொள்ளுங்கள்.

DT0003743 - June 2023